



கழக மறுசீரமைப்பு பணிகள் குறித்து விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக்கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையிலும் புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா, கழக மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என். முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வராஜ், எம்.அப்துல்சலாம், பொதுக்குழு உறுப்பினர்கள் காடுவெட்டி ஏழுமலை, ராஜசேகர், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டார்கள்.

'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!



கடந்த தி.மு.க. ஆட்சியில் ஒரு யூனிட்டிற்கு ரூ.11க்கு விலை நிர்ணயித்த

டெண்டரை ரத்து செய்து - ஒரு யூனிட் ரூ. 35 என்ற அதிக விலைக்கு கொள்முதல் செய்வது ஏன்?

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, அக்.15- தினகரன் நாளேடு 14.10.2026 அன்று வெளியிட்டுள்ள தலையங்கம் வருமாறு:-

தமிழகத்தில் தவெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் தமிழக அரசு மின் பற்றாக்குறையை சமாளிக்க ஒரு யூனிட் ரூ.35 என்ற விலையில் 4,500 மெகாவாட் மின்சாரம் வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக விளக்க மளித்துள்ள எரிசக்தித்துறை அமைச்சர் நிர்மல்குமார், இந்த ஒப்பந்தம் நாளை (அக்.15) முதல் 31ம் தேதி வரை மட்டுமே. இதனால் ஒரு நாளைக்கு அரசுக்கு ரூ.5 கோடி கூடுதல் செலவாகும். நுகர்வோர் அதிகம் மின்சாரத்தை உபயோகிக்கும் மாலை 6 மணி முதல் இரவு 12 மணி வரையிலான மின்தேவையை சரிக்கட்டவே இந்த ஒப்பந்தம் செய்துள்ளோம் என விளக்கமளித்துள்ளார்.


தினகரன்
அக்டோபர் 14, 2026 புதன்கிழமை
தமிழக மக்களுக்கு 'ஷாக்'

சூப்பர் எல்நினோ தாக்கத்தால் தமிழகத்தில் அதிக எவு வெப்பநிலை தற்போது வரை நிலவுவது உண்மைதான் என்றாலும், தமிழக அரசின் இந்த அதிக விலை கொள்முதல் மேலும் மின்கட்டண உயர்வை ஏற்படுத்துவதோடு, வரியினங்களையும் அதிகரிக்கவே செய்யும். சட்டப்பேரவையில் குறுகிய கால மின் சாரக் கொள்முதலைக் குறைத்து, மாதத்திற்கு சுமார் ரூ.200 கோடி சேமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்திருந்தார். இந்த சூழலில் அதிக கொள்முதலில் மின் சாரத்தை வாங்கும்போது, அது பெரும் ஊழலுக்கே வழிவகுக்கும். எதற்கெடுத்தாலும் அரசு கஜானாவை காலியாக உள்ளதாகக் கூறி வரும் த.வெ.க. அரசு, இப்படி அவசரமாக கொள் முதல் செய்து யாருக்காக?

இது அரசின் திறனற்ற நிர்வாகத்திறமையை காட்டுவதாகவும், ஊழலுக்கு வழி வகுப்பதாக உள்ளதாகவும் அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். கடந்த தி.மு.க. ஆட்சியில் ஒரு யூனிட்டிற்கு ரூ.11 முதல் ரூ.20 வரை விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த குறுகிய கால மின் கொள்முதல் டெண்டர்களைக் கடந்த மே மாதம் த.வெ.க. அரசு ரத்து செய்தது. இது நிர்வாக சீர் திருத்த நடவடிக்கை என சப்பைக்கட்டு கட்டினாலும், அதை விட அதிக விலைக்கு கொள்முதல் செய்வது ஏன்? இதை விட குறைந்த விலைக்கான டெண்டர்களை ரத்து செய்தது ஏன்? குறுகிய காலத்திற்காக மேற்கொண்ட நடவடிக்கை என அரசு தரப்பில் கூறினாலும், மின்பற்றாக்குறை தொடரும்பட்சத்தில் இந்த ஒப்பந்தம் தொடருமா அல்லது மாற்றுவழிகள் யோசிக்கப்படுமா என்பதற்கும் அரசிடம் தெளிவான விளக்கம் இல்லை.

மின்சார வாரியம் ஏற்கனவே ரூ.2.47 லட்சம் கோடி கடனுடன் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த சூழலில், ஒரு யூனிட் ரூ.35 என்ற விலையில் வாங்கும்போது, மின்வாரியம் மேலும் ரூ.1 லட்சம் கோடிக்கு கூடுதலான இழப்பையும் சந்திக்க நேரிடும். ஏற்கனவே கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் திணறும் மின்வாரியம், இன்னும் ஓராண்டுக்கு கூட செயல்பட முடியாமல் முடங்கி விடும் அல்லது மின்சாரக் கட்டணத்தை இரு மடங்காக உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என பா.ம.க. தலைவர் அன்புமணி விமர்சித்துள்ளார்.

மேலும், பல கட்சி தலைவர்களும் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் தற்போது ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு கூட வழக்கத்தை விட அதிகளவு மின்கட்டணம் வருகிறது. மின்சாரத்தை தொட வேண்டாம். கட்டணத்தை பார்த்தாலே 'ஷாக்' அடித்த உணர்வை தரும் சூழலில், கூடுதல் விலைக்கு பெறப்படும் மின்சாரத்தால் இது மேலும் அதிகரிக்கவே வாய்ப்புள்ளது. எனவே, தமிழக அரசு இதுகுறித்து, மக்களுக்கு தெளிவான தொரு விளக்கத்தை அளிக்க வேண்டும். ஏற்கனவே, நிதிச்சுமையில் தவிக்கும் மக்களுக்கு கூடுதல் சுமையை தருவதற்கான முயற்சியில் த.வெ.க. அரசு ஒருபோதும் இறங்கக்கூடாது என்பதே அனைவரின் விருப்பமாகும்.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தனது தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ளிருப்புப் போராட்டம்!

சென்னை, அக்.15- சென்னை கொடுங்கையூர் பகுதியில் விஷவாயு தாக்கி உயிரிழந்த 2 தொழிலாளர்களின் உறவினர்கள், நீதி கேட்டு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கொடுங்கையூர், தென்றல் நகர் 3வது தெருவில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க சுமார் 15 அடி ஆழத்தில் மழைநீர் வடிகால் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இந்த தொட்டியில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டாரை சரி செய்து, தொட்டியில் தேங்கியுள்ள கழிவுகளை அகற்றுவதற்காகவும் மாநகராட்சி சார்பில் தற்காலிக பணியாளரான அஹ்மத் பாஷா தொட்டிக்குள் இறங்கி சுத்தம் செய்த போது விஷவாயு தாக்கியது. அவரை காப்பாற்ற சென்ற சகபணியாளர் நவீனையும் விஷவாயு தாக்கியது. இதில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். உயிரிழந்த ஒப்பந்த தொழிலாளர்களின் உடல் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இதனிடைய தொழிலாளர்களின் மரணத்திற்கு நீதி கேட்டு அவரது உறவினர்கள் ஸ்டான்லி மருத்துவமனை முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

திராவிட மாடல் நல்லாட்சியில் மக்கள் நலத்திட்டங்களை

கடைக்கோடி மக்களிடம் கொண்டு சேர்த்து 5 ஆண்டு கால பணிகள் நிறைவு!

ரிஷிவந்தியம் தொகுதி ஒன்றிய உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வாழ்த்து!

ரிஷிவந்தியம், அக்.15- கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியத்தில் 5 ஆண்டு கால நிர்வாக பொறுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்யும் தலைவர், கவுன்சிலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளருமான வசந்தம் க.கார்த்திகேயன் வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு வென்ற பிரதிநிதிகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 ஆண்டுகள் சிறப்பாக சேவையாற்றியுள்ளனர், வரும் அக்டோபர் 19ம் தேதியுடன் தங்களது நிர்வாக பொறுப்பை நிறைவு செய்யவுள்ள ரிஷிவந்தியம், திருக்கோவிலூர் ஒன்றிய தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

திராவிட மாடல் ஆட்சியின் பல கோடி ரூபாய் மதிப்பிலான மக்கள் நலத்திட்டங்களை கடைக்கோடி மக்களிடம் கொண்டு சேர்த்து, கிராமப்புற சுகாதாரம், ஆரம்ப பள்ளிகள், அங்கன்வாடிகள், குடிநீர் வசதி, சாலைகள், மின்விளக்குகள், பாலங்கள் மற்றும் கழிவுநீர் வாய்க்கால்கள் என பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளையும் தேவைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றி, நிர்வாகத்தை மிக சிறப்பாக கையாண்டு அனைவரும் வியக்கும் வகையில் சாதனைகளை படைத்துள்ளனர், சிறப்பாக செயல்பட்ட ரிஷிவந்தியம், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், துணை தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, அஞ்சலாட்சி அரசகுமார், தனம் சக்திவேல், மாவட்ட கவுன்சிலர்கள் கோவிந்த ராஜ், அமிர்தம் ராஜேந்திரன், ராஜேந்திரன், ஜெய்சங்கர் மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு வாழ்த்துக்கள். மேலும், பணிகளை செவ்வனே செய்து முடித்த ரிஷிவந்தியம், திருக்கோவிலூர் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள், அரசு அதிகாரிகள், ஊழியர்கள், அமைச்சு பணியாளர்கள், ரிஷி வந்தியம், திருக்கோவிலூர் ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், பாரதிதாசன், துரைமுருகன், ராஜேந்திரன், அய்யனார், கிருஷ்ணமூர்த்தி, பேரூராட்சி மன்ற தலைவர் ரேவதி ஜெய்கணேஷ், துணைத் தலைவர் தம்பி துறை, பேரூர் கழக செயலாளர் ஜெய் கணேஷ் உறுப்பினர்கள் ராஜு, கணேசன் ஆகியோருக்கும், இவற்றுக்கு முழு ஒத்துழைப்பு அளித்த ஊராட்சி மன்ற தலைவர்கள், வார்டு கவுன்சிலர்கள் மற்றும் பணிகளை கண்காணித்த கழக நிர்வாகிகள் அனைவருக்கும் எனது நன்றியையும் வித்துக்கொள்கிறேன், இவ்வாறு வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

சாக்கடை தொடப்பம்!



கூரூர் கம்பெனி
பாட்டிலுக்கு பத்து ரூபாய்
என்றெல்லாம்
அன்று பாட்டுப் பாடிய
விசில் கம்பெனி

இப்ப என்னடான்னா
பாட்டிலுக்கு முப்பது
ஓவா வாங்குவதையும்

அதே போல
மின்சாரத்தை
தனியாரிடமிருந்து
யூனிட்டுக்கு
இருபது ரூபாய்க்கு
வாங்குவதான்னு அன்று
ஒப்பாரிவுட்டு அழுத
கோட்டுமாடல் சர்க்கார்
இன்று ஒரு யூனிட்டை
முப்பத்தைந்து
ஓவாய்க்கு
வாங்குவதையும்

செருப்புக் கழற்றி
அடிச்சிருக்காப்ள
செந்தில் பாலாஜி...

ப்ளாக் டிக்கெட்
ஆட்சியின் தொடக்கமே
சாக்கடையில் ஊறிய

தொடப்பக் கட்டையா
நாறுதே...

என்னநாஞ் சொல்றது



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்



கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன் புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற நிலைக்குழுவின் முதல் கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாகுண்ட ஸ்ரீனிவாசலு ரெட்டி அவர்களுக்குச் சால்வை அணிவித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, புதூர் ஊராட்சி ஒன்றியம்,காடல்குடி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சசிகுமார்,தனலட்சுமி ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், இம்மானுவேல், மாவட்ட பிரதிநிதி வேலுச்சாமி, பாக முகவர் சுரேஷ்குமார், பாக டிஜிட்டல் ஏஜென்ட் செல்வராஜ், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் ஜனகர், கிளைச் செயலாளர் வேல்வாசகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.